DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 111/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : சண்முகம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 23.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 23rd January 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். நானும், என் நண்பர் அபுதாஹிரும் திருநெல்வேலி சென்றுவிட்டு வரும்போது குருக்கள்பட்டிக்கு அருகில் எனக்கு தெரிந்த ஒரு அண்ணனின் கார் விபத்து ஏற்பட்டிருந்தது. நாங்கள் அங்கு இருக்கும்போது அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். கையொப்பம் கேட்டார்கள். போட்டுக்கொடுத்தேன். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலீசார் விசாரணையில் கடந்த 28.09.2014 ம் தேதி இரவு 8.30 மணியளவில் நானும், எங்கள் ஊரை சேர்ந்த அபுதாஹிரும் குருக்கள்பட்டி ஊரில் இருந்தபோது அங்கு வந்த சங்கரன்கோவில் தாலுகா போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டுபார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நானும், அபுதாஹிரும் கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 111/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : அபுதாஹிர் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 23.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 23rd January 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். 2014 ம் ஆண்டு ஒரு நாள் நானும், என் நண்பர் சண்முகமும் திருநெல்வேலி சென்றுவிட்டு வரும்போது குருக்கள்பட்டிக்கு அருகில் விபத்து நடந்த இடத்தை நாங்கள் பார்த்துக்கொண்டிருந்தபோது அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

முதல்விசாரணையில் கூறிய நாளில் நான் திருநெல்வேலியிலிருந்து வரும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 6–7 மணி இருக்கும். நாங்கள் வந்த சமயத்தில் விபத்து நடைபெற்று முடிந்துவிட்டதா என்றால் நாங்கள் வந்தபோது அந்த இடத்தில் கூட்டமாக இருந்தது. பார்வை மகஜரில் என்னிடம் எந்த போலீசார் கையொப்பம் கேட்டார் என குறிப்பாக என்னால் கூறமுடியுமா என்றால் கூறஇயலாது. பார்வை மகஜரில் உள்ளவிபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரர் அப்துல்காதர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் அவர் எனது நண்பர். நாங்கள் இருவரும் ஒரே தெருவை சேர்ந்தவர்களா என்றால் நாங்கள் இருவரும் வேறு வேறு தெருவை சேர்ந்தவர்கள். புகார்தாரர் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**